## வரையறுக்கப்பட்ட தேசிய உப்பு கம்பனி – 2022/2023

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட தேசிய உப்பு கம்பனியின் (“கம்பனி”) 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (SMEs இற்கான SLFRS) இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களிற்கு (SMEs இற்கான SLFRS) இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது

கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனியின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமைகள்

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக சிறிய மற்றும் தடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 17.2 ஆம் பந்தியின் பிரகாரம் ஆணையிறவு உப்பளத்தில் பெறுமதி ரூபா 6,828,395 ஆன வாகனம் மற்றும் உபகரணங்கள், பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அந்த சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | 2023/24 ஆம் ஆண்டில் நிதி அறிக்கையில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் சொத்துப் பட்டோலைகள் பௌதீக மெய்மையாய்வு அறிக்கையுடன் இணங்கம் செய்து நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக சிறிய மற்றும் தடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 17.19 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களை மதிப்பீடு செய்து பயன்தரு ஆயுட்காலத்தை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 7,856,096 ஆன உபகரணங்கள் மீளாய்வாண்டில் பயன்படுத்தப்பட்டிருந்தது. | முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட சொத்துக்கள் 2023/24 இன் நிதி ஆண்டின் போது மீண்டும் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் சொத்துக்களின் ஆயுட் காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். |

#### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிறிய மற்றும் தடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 23.10 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனி விற்பனை செய்த உப்பு இருப்பு கொள்வானவாளர்களினால் அகற்றுப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது அப்பெறுமதி வருமானத்தில் செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் விற்பனை பட்டியலுக்காக கிடைக்கின்ற | எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கொள்வனவாளர்களுக்கு மீளப் பணம் வழங்கப்படா திருந்ததுடன் பொருட்களின் உரிமைத் தன்மையின் ஆபத்து மற்றும் நலன்களை மாற்றும் போது வருமானமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. | நியமத்தின் பிரகாரம் வருமானங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பணம் முழுமையாக வருமானமாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2021/2022 ஆம் ஆண்டின் போது வருமானமாக இனங்காணப்பட்டதன் காரணமாக 2022/2023 ஆண்டிற்குரிய ரூபா 10,164,900 வருமானத்திற்கு எடுக்கப்படாமை மற்றும் 2023/2024 ஆண்டிற்குரிய ரூபா 7,500,600 வருமானம் 2022/2023 ஆண்டில் வருமானத்திற்கு எடுக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 2,664,300 இனால் குறைவடைந்திருந்தது. | | |
| (ஆ) | கணக்காய்வின் கணப்பீட்டின் படி ஆணையிறவு மற்றும் மன்னார் என்ற இரண்டு உப்பளங்களிலும் இறுதி இருப்பின் பெறுமதி ரூபா 19,302,311 ஆக இருந்த போதிலும் இறுதிக் கணக்குகளில் இறுதி இருப்பின் பெறுமதி ரூபா 16,939,168 ஆக எடுக்கப்பட்டமையால் இருப்பின் பெறுமதி ரூபா 2,363,143 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டில் இது சரிசெய்யப்படும். | இறுதி இருப்பின் பெறுமதி சரியாக கணிப்பீடு செய்யப்படல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளுக்கான செயற்பாட்டு கைநூலின் 6.6 ஆம் பந்தி | மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கையின் பிரதி என்பன கணக்காண்டு முடிவடைந்து அறுபது (60) நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கம்பனியால் மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் 2023 நவம்பர் 01 ஆம் திகதி | கணக்காண்டின் போது நிதி முகாமையாளர் கேட்டு விலகியதன் காரணமாக கம்பனிக்கு புதிய உத்தியோகத்தர் ஒருவரை சேர்க்க வேண்டி ஏற்பட்டிருந்த துடன் அந்த அறிக்கையை சமர்ப்பித்தல் தாமதமடைவதற்கு காரணமாக இருந்தது. அடுத்துவரும் ஆண்டில் இந்தப் பிரச்சினைகள் | குறித்துரைத்த திகதியில் நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஆண்டறிக்கை என்பவற்றை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அதாவது 05 மாத தாமதத்தின் பின்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும் 2023 ஒக்டோபர் 25 ஆம் திகதி வரையும் ஆண்டறிக்கையின் வரைவொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | தவிர்க்கப்படும். | |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 நிதி அமைச்சு சுற்றறிக்கையின் கீழ் விநியோகிக்கப்பட்ட செயற்பாட்டுக் கைநூலின் 3.2(v) பந்தி மற்றும் நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் 2022 ஆகஸ்ட் 08 ஆம் திகதிய வீஈடீ 04/2022 சுற்றறிக்கையின் 2.5 ஆம் பந்தி | கம்பனியால் 2022 யூன் மாதம் முதல் 2022 திசெம்பர் வரை சகல உத்தியோகத்தர்களுக்காகவும் ரூபா 5,000 மாதாந்தப் படியொன்று செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்தப் படி நிறுத்தப்பட்டு 2023 சனவரி மாதம் முதல் 06 மாத காலத்திற்காக பதவியின் அடிப்படையில் ரூபா 500-850 இற்கிடையில் நாளாந்த நெருக்கடி படியாக 111 உத்தியோகத்தர்களுக்காகவும் ரூபா 10,032,098 தொகை சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக பணிப்பாளர் சபை அங்கீகாரத்தில் செலுத்தப்பட்டிருந்தது. | கம்பனியின் நல்லாளுகையைக் கவனத்திற் கொண்டு மாதத்திற்கு ரூபா 5,000 படி ஒன்றை வழங்குவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது. முகாமைத்துவத்தை ஊக்குவிக்கும் கொள்கையொன்றை தயாரித்து 2023/02/03 ஆந் திகதி PED அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளதுடன் அதற்கான அங்கீகாரம் கிடைக்கும் வரை அவர்களின் தொகுதியின் அடிப்படையில் வருகைப்படி செலுத்துவதற்கு 2023 பெப்ரவரி மாதம் பணிப்பாளர் சபை தீர்மானத்திருந்தது. | சுற்றிக்கையின் பிரகாரம் படிகளை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2022 திசெம்பர் 21 ஆம் திகதிய 09/2022 ஆம் இலக்க நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கை அமைச்சு சுற்றறிக்கை. | 2022 ஆம் ஆண்டிற்காக இலாபத்தின் அடிப்படையில் மிகை ஊதியப்படி செலுத்தும் போது வருகை மற்றும் செயலாற்றல் அல்லது ஏனைய விதத்தில் ஊக்குவிப்புப் படி செலுத்துகின்ற நிறுவனத்திற்காக ரூபா | முகாமைத்துவத்தால் அங்கீகரிக்கப்பட்ட மிகை ஊதியப்படியில் இருந்து அவர்களில் நிரந்தர உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் அறவிடப்பட்டுள்ளது. | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| | 20,000 படி ஒன்று செலுத்த முடியுமாக இருந்த போதிலும் ஆணையிறவு மற்றும் மன்னர் உப்பளங்களில் ஈடுபடுகின்ற 123 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 25,000 வீதம் மிகை ஊதியப் படியொன்று செலுத்தியதன் காரணமாக ரூபா 615,000 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 134,806,255 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 109,940,047 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 24,866,208 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது விற்பனைக் கிரயம் ரூபா 51,360,478 இனாலும், விற்பனை மற்றும் நிர்வாக செலவினம் ரூபா 24,344,748 இனாலும் மற்றும் வருமான வரி ரூபா 37,013,757 இனாலும் அதிகரித்திருந்த போதிலும், உப்பு விற்பனை விலை கடந்த ஆண்டினை விட அதிகரித்தமையால் விற்பனை வருமானம் ரூபா 94,089,930 இனால் அதிகரித்தமை மற்றும் நிலையான வைப்பின் அடிப்படையில் வட்டி வருமானம் ரூபா 36,229,522 இனால் அதிகரித்தமை என்பன இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆணையிறவு உப்பளத்தில் Common Salt Super Grade 825 மெற்றிக்தொன் 01 மெற்றிக்தொன் ரூபா 55,000 விலையில் ஆண்டில் கொள்வனவாளர்களுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. கம்பனி Common Salt Grade இடல் பார்வை மதிப்பீட்டு மட்டத்தில் பரீட்சித்து தீர்மானிக்கப்பட்டமையினால் அந்த குறிகாட்டி விற்பனை செய்யப்பட்ட Supper Grade இற்காகவும் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் காரணமாக Supper Grade மெற்றிக்தொன் 825 இன் வகையில் பல்வேறு நிறங்களில் காணப்படுகின்றமையும் (Variation | எதிர்காலத்தில் பிரச்சினைகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிறுவனத்திற்கு நட்டம் ஏற்படாத வகையில் உற்பத்தியினை மேற்கொள்ளல் வேண்டும். |

of Colour) வெளிக்கூறுகள் இருந்தமையும் (Presence of Extraneous matters), சேறு மற்றும் மணல் கூறுகள் உள்ளடங்கியிருந்தமையும் (presence of mud and Sand Particles) கொள்வனவு செய்யப்பட்ட நிறுவனத்தால் கம்பனிக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

## 3.2 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மன்னார் உப்பளத்திற்காக நான்கு நிறங்களுடனான (LLDPE) 1,200,000 உறைகளைக் கொள்வனவு செய்வதற்கு 2021 ஒக்டோபர் 15 ஆம் திகதி பத்திரிகையில் அறிவித்தல் பிரசுரித்து 2021 திசெம்பர் மாதத்தின் போது உறையொன்றுக்காக ரூபா 5.08 விலையில் இணங்கிய நிறுவனம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. எனினும் கட்டளை சமர்ப்பித்தல் 2022 பெப்ரவரி மாதம் வரை தாமதமடைந்ததன் காரணமாக ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியினைக் கவனத்திற் கொண்டு உறையொன்று ரூபா 14 விலை வழங்குவதற்கு தெரிவு செய்த வழங்குநர் விருப்பம் தெரிவித்திருக்கும் போது கேள்வியினை சமர்ப்பிக்கப்படாத வேறுறொரு வழங்குநரிடமிருந்து உறையொன்று ரூபா 14 வீதம் 500,000 உறைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கட்டளை பெற்றுக்கொள்ளும் தாமதத்தின் காரணமாக கம்பனிக்கு மேலதிகமாக அதிக விலையில் உறையொன்றைக் கொள்வனவு செய்வதற்கு ஏற்பட்டதன் காரணமாக ரூபா 4,462,000 நட்டமொன்றை செய்யவேண்டி ஏற்பட்டிருந்தது. | COVID 19 தாக்கம் மற்றும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக எதிர்பாராத வகையில் இறக்குமதிகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன் பற்றாக்குறையின் காரணமாக மூலப்பொருட்களின் விலைகள் உயர்வடைந்து சென்றிருந்தது. அதனால் கையளிக்கப்பட்ட கம்பனி குறிப்பிட்ட விலையில் உறையினை வழங்குவதை நிராகரித்தது. கிரயத்தைக் கணிப்பீடு செய்வதற்காக புதிய விலை கவனத்திற் கொள்ளப்பட்டதுடன் அதன் பிரகாரம் உப்பு பக்கற்றின் விலை அதிகரிக்கப்பட்டிருந்து. அதிகரிக்கப்பட்ட விலையின் மூலம் கிரயம் NSL மூலம் மேவுகை செய்யப்படுகின்றமையினால் NSL இற்காக எந்தவொரு நட்டமும் ஏற்படவில்லை. | வழங்கல்களுக்கு உரிய கட்டளையிடல் நடவடிக்கைகள் தாமதமின்றி மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் பாதீட்டு தரவினைப் பரீட்சித்த போது மன்னார் உப்பளத்தில் Common Salt மெற்றிக்தொன் 5,500 மற்றும் ஆணையிறவு உப்பளத்தில் மெற்றிக்தொன் 16,000 உற்பத்தியொன்றை செய்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் உள்ளபடியான உற்பத்தி முறையே மெற்றிக்தொன் 2,215 மற்றும் மெற்றிக்தொன் 6,167 மாத்திரமாக இருந்தது. அதாவது முறையே மெற்றிக்தொன் 3,285 மற்றும் மெற்றிக்தொன் 9,833 அளவுகளை கம்பனிக்கு உற்பத்தி செய்வதற்கு முடியாதிருந்தது. | COVID 19 தாக்கம், எரிபொருள் நெருக்கடி மற்றும் மின்சாரம் துண்டித்தல், 2021 மற்றும் 2023 ஆண்டின் போது அவதானிக்கப்பட்ட அசாதாரண காலநிலை (அதாவது அறுவடை செய்யும் காலத்தில் பெறப்பட்ட மழை வீழ்ச்சி மற்றும் உற்பத்தி செயற்பாடுகளில் தாக்கம்) போன்ற காரணங்களினால் 2020 முதல் 2022 வரை உற்பத்தி விகிதம் குறைவடைந்திருந்தது. | பாதீடு செய்யப்பட்ட இலக்கினை அடைந்து கொள்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |